1994 ஏப்ரல் 13]

என்பதைப் பார்த்துத்தான் சீரமைக்க முடியும். இருக்கின்ற நிதி ஆதாரங்களையும் பார்த்துத்தான் செய்ய முடியும். ஏற்கெனவே, கடந்த 5 ஆண்டுகளில் இந்த ஏரிகளில் 2 முறை, ஒவ்வொரு ஏரியிலும் நீர் நிறைந்து இருக்கிறது. ஆகவே, கொள்ளளவைப்பற்றி கணக்கு எடுத்ததற்குப் பின்னாலேதான், அதற்கான திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை திரு. தவசி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

267—

உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டியில் நீர்த்தேக்கம் கட்டுதல்

*** 17144-திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டி கிராமம், வடலூத்து கணவாய் முடக்கு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கணவாய் முடக்கு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், உத்தமபாளையம் வட்டம், ஓடைப்பட்டி கிராமம் கணவாய் முடக்கு அருகே ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டம் தலைமைப்பொறியாளரின் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) ஆய்வில் இருக்கிறது.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டி கிராமம், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலுள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில், பல்வேறு கிராமங்கள் பயன் அடையக்கூடிய அளவில் ஒரு சிறு ஓடை போன்று உள்ளது. அதை மீண்டும் பரிசீலனை

செய்து, அடுத்த ஆண்டிலாவது அந்த நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தமபாளையம் தாலுகா, ஓடைப்பட்டி கிராமம், கணவாய் முடக்கு அருகில் புதிய குளம் அமைப்பதற்கு ரூ. 16.53 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உடனடியாக அனுமதி தந்தால், உடனே இந்த ஆண்டே எடுத்துக் கொள்ளலாம். (சிரிப்பு) அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதியமைச்சர் ஆட்சேபிக்க மாட்டார். நீங்கள் துணிந்து சொல்லலாம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ரூ. 16-1/2 இலட்சம் செலவில் திட்டம் தயாரித்து வைத்திருக்கிறோம். தொழில் நுட்ப அனுமதியை நம்முடைய அரசிடத்தில் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்துத்தான் செய்ய இயலும். அது நம்முடைய தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருக்கிறது. ஆகவே, நிதியமைச்சர் அவர்களோடு நிதியாதாரம் பற்றிக் கலந்துபேசி, வாய்ப்புகள் இந்த ஆண்டு இருக்குமானால் உடனடியாக இந்த ஆண்டே நிறைவேற்றலாம். இல்லையென்றால் வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப சிறப்பு ஆணையர், நில நிர்வாகம் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அரசினுடைய அனுமதியைப் பெற்று, இந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி நிதியமைச்சர் ஆராய்ந்து ஆவன செய்வார். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 268, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. எஸ். அன்பழகன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

ALONE TRIUMPH